நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08- ஆம் நாள் புதன்கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 25-ம் நாள்.

**CNR No. TNTV07-000249-2026**

**in**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 118/2026**

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 29.01.2026

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள் : 13.03.2026

அரசுக்காக :-

காவல் உதவி ஆய்வாளர்,

கோட்டூர் காவல் நிலையம்,

குற்ற எண். 219/2025.

சட்டப்பிரிவு. 4(1)(C) TNP (Amendment) Act ... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

சகாயராஜ், வயது. 57/26,

த/பெ. ராயப்பன்,

மெயின்ரோடு, கோட்டூர் தோட்டம்.

மன்னார்குடி தாலுக்கா. .... எதிரி

| Sl. No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | Station Bail |
| 2. | The Date of filing of Complaint / Final Report in the Court | 29.01.2026 |
| 3. | The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C., | 03.03.2026 |
| 4. | Miscellaneous petition and thier results including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code. | N.A. |

| | | |
|---|---|---|
| 5. | Date of Examination in chief and cross | <table><tr><td>PW</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>1</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr><tr><td>2</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr></table> |
| 6. | Date of Examination of the Accused under section 313 Cr.P.C., | 13.03.2026 |
| 7. | Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be | N.A. |
| 8. | Grant of stay by Superior Courts | N.A. |

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை. 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று (08.04.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது காவல் உதவி ஆய்வாளர், கோட்டூர் காவல் நிலையக் குற்ற எண். 219/2025 எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act -ன் கீழான குற்றம் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடப்பட்டதாகும்.

**1. குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம் -**

கடந்த 26.11.2025 ம் தேதி மதியம் சுமார் 13.15 மணியளவில் கோட்டூர் காவல் சரகம், கோட்டூர் தோட்டம் எதிரியின் வீட்டின் பின்புறம் இவ்வழக்கின் எதிரி சகாயராஜ், த/பெ. ராயப்பன் என்பவர் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் டாஸ்மாக் 180 ml அளவுள்ள EXPRESS BRANDY-26 மதுபாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததால் எதிரியின் மீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act -ன்கீழ் கோட்டூர் காவல் உதவி ஆய்வாளர் ஒரு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்றப் பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS -ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய அவகாசம் வழங்கிய பின் இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதால் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act -ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அக்குற்றச்சாட்டை எதிரிக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்டபோது எதிரி தன்மீது சாட்டப்பட்ட குற்றத்தை தான் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. எதிரி கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலான நபர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், கைப்பற்றுதல் மற்றும் அழிப்பு மகசர் சாட்சியான பட்டியல் சாட்சி 1 புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியமளித்த காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வநாயகம் ஆகியோர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்றுபொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

6. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரியின் மீதான வழக்கின் சாராம்சம் பின்வருமாறு :-</u>

i) கடந்த 26.10.2025 ஆண்டு கோட்டூர் காவல் நிலையத்தில் மதுவிலக்கு சம்மந்தமாக கோட்டூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் பட்டியல் சாட்சி 3 காவல் உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி, பட்டியல் சாட்சி 2 இரண்டாம் நிலை காவலர் திரு. துரை மற்றும் அ.சா.1 முதல் நிலைக் காவலர் திரு. கார்த்திகேயன் ஆகியோர் ரோந்து பணியில் கண்காணித்து வந்தபோது, கோட்டூர் தோட்டம், எதிரியின் வீட்டின் பின்புறம் சந்தேகம்படும்படி நின்றுக்கொண்டிருந்த நபர் போலீசாரைக் கண்டதும், எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ராயப்பன் மகன் சகாயராஜ் என்று கூறியவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரி

நின்றுக்கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Express என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது பற்றி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 13.15 மணியளவில் கைது செய்து எதிரியிடமிருந்து அவர் வைத்திருந்த தடயப் பொருட்களை 13.30 மணியளவில் அசா.ஆ.1 கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் உதவி ஆய்வாளருடன் சென்ற அ.சா.1 மற்றும் பட்டியல் சாட்சி 2 ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர்.

ii) பின்னர் காவல் உதவி ஆய்வாளர், அவர்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை 13.45 மணியளவில் அழித்து அ.சா.ஆ-2 அழிப்பு மகசர் தயார் செய்தார். அதிலும் மேற்படி நபர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர். பின்னர் எதிரி மற்றும் மகசருடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலையக் குற்ற எண்.219/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் அ.சா.ஆ-3 முதல் தகவல் அறிக்கையின் படி எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தக்க சட்டவழிக்காட்டுதலுடன் நிலைய பிணையிலேயே விடுவித்துள்ளார். இத்துடன் அவரது புலன்விசாரணை முடித்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் தண்டிக்கத்தக்க குற்றம் என்று கடந்த 26.10.2025-ம் தேதியன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வநாயகம் அவர்கள் சாட்சியமளித்துள்ளார்.

7) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை 351(1)(b) BNSS-வின் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரணை சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**8. அரசு தரப்பு வாதம் -**

அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரி சம்பவ சமயத்தில் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் 180 ml அளவுள்ள Express Brandy- 26 பாட்டில்கள் வைத்திருந்தார் என்பதை

நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளித்திருப்பதாகவும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களும், சாட்சிகளின் சாட்சியங்களை தொடர்புபடுத்தும் விதமாக அமைந்துள்ளதாகவும், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதாக கூறி எதிரிக்கு தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**<u>9. எதிரி தரப்பு வாதம்</u>**

எதிரி தரப்பு வாதத்தின் போது இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரி மீது பொய்யான வழக்கு போட்டு இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் உயர் அதிகாரியின் உத்தரவுப்படி போடப்பட்ட வழக்கு என்றும் எதிரி மேற்கண்ட குற்றத்தை செய்யவில்லை என்று கூறி விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாதெனில், அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழான குற்றச்சாட்டு தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>10) தீர்வு</u>**

இவ்வழக்கில் எதிரிதான் சம்பவ சமயத்தில் அரசு அனுமதி மற்றும் உரிமம் இல்லாமல் சுமார் 180 ml அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள் 26 வைத்திருந்தார் என்பதை அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் மற்றும் சான்றாவனங்களின் வாயிலாக நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

11) **கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகசரில் சாட்சிக் கையொப்பம் செய்த அ.சா.1 தனது சாட்சியத்தில் "** மேற்படி காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி நின்றுக்கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது, **டாஸ்மாக் 180 ml Express என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 13.15 மணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை 13.30 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் உதவி**

**ஆய்வாளருடன் சென்ற நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர். பின்னர் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை 13.45 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார். அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். "** என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** " இவ்வழக்கின் புகார்தாரரான உதவி ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி என்றால்-சரிதான். இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. " என்று கூறியுள்ளார்.

12) **புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியமளித்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "** இவ்வழக்கின் புகார்தாரரான உதவி ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி என்றால்-சரிதான். இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்குஅமல் சட்டப்பிரிவு 32 ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின் படி தடயப்பொருள் அழிக்கப்படவில்லை என்றால்-அதுபற்றி புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. " என்று கூறியுள்ளார்.

**<u>Sec. 32(c) of the TNP Act</u>**

(c) May search any person, vessel, vehicle, animal package, receptacle or covering, upon whom or in or upon which, he may have reasonable cause to suspect any such liquor, drug or other article to be or to be concealed:

[Provided also that where any [illicit arrack] is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a **Prohibition Officer or any Police officer not below the rank of Inspector,---**

(i) take two samples of the [illicit arrack] or such quantity and in such manner as may be prescribed, and

(ii) destroy or cause to be destroyed the [illicit arrack] and send the pots or other receptacles in which the [illicit arrack] was kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the [illicit arrack] was destroyed, as to the total quantity of [illicit arrack] seized, the total quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. The Magistrate shall, upon the receipt of the samples, retain one **in his Court and send the other to such Officer as may be prescribed for chemical Analysis.] என்று கூறப்பட்டுள்ளது.**

**13)** அ.சா.1 தனது முதல் விசாரணையில் " பின்பு கைப்பற்றப்பட்ட தடயத்தை பாதுகாப்பாக சம்பவ இடத்திலேயே பட்டியல் சாட்சி 3 காவல் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கொட்டி அழித்தார்" என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் எதிரியிடம் இருந்து தான் 26- EXPRESS BRANDY பிராந்தி பாட்டில்களை கைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் பிரிவு 32 தமிழ்நாடு மதுவிலக்கு அமல்பிரிவு சட்டத்தில் சொல்லியுள்ள வழிமுறைகளை பின்பற்றி அழிக்கவில்லை என்பதும் அ.சா.1 ன் சாட்சியத்தில் வாயிலாக தெரிய வருகிறது.

14) அரசு தரப்பில் எதிரியிடமிருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 180 ml அளவுள்ள EXPRESS BRANDY 26 பாட்டில்கள் மடக்கி பிடித்ததற்கு ஆதரவாக தனி நபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 180 ml அளவுள்ள EXPRESS BRANDY 26 பாட்டில்கள் அ.சா-1 மற்றும் பட்டியல் சாட்சி 2 முன்னிலையில் அழிக்கப்பட்டதாக கூறுகின்றனர். அதற்கான காவல்துறை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32 ன்படி மது அழிக்கப்படுவதற்கு, மாதிரிகள் எடுக்கப்படுவதற்கு, உரிய சான்றிதழ் தயாரிப்பதற்கு கட்டாயமாக கீழ்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் கூறியுள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**(iv) Selvi – vs – State Rep. by on 18 March 2011** - It has been stated "A close reading of the above third provision to section 32(C) of the TN Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can take samples only in the presence of a Prohibition Officer or any Police Officer not below the rank of an Inspector of Police and then

he can destroy the remaining contraband". In respect of the destruction, the said Prohibition Officer or Police Officer, in whose presence the destruction is done. Should give a certificate in respect of the total quantity seized the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having Jurisdiction. But in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a Prohibition officer or any Police officer not below the rank of an Inspector of Police. It may be true that Pw.8 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso, In the case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from illicit arrack seized and the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely a Prohibition Officer or any Police Officer not below the rank of Inspector is insisted upon. This Procedure in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seized the illicit arrack".

**15)** சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் பட்டியல் சாட்சி 3 ஆன காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் பட்டியல் சாட்சி 2 மற்றும் அ.சா.1 ஆகியோர் மதுவிலக்கு சோதனைக்கு சென்றதற்கு எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு அரசு தரப்பில் தகுந்த காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32 முறையாக பின்பற்றப்படவில்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32-ன் கீழ் மற்றொரு காவல் ஆய்வாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டு சான்றிடப்படவில்லை. மேலும் எதிரி கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து 180ml அளவுள்ள EXPRESS BRANDY 26 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதற்காக தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1-க்கு ஆதரவாக தனிநபர் சாட்சியம் எவரும் இல்லாததால் காவல்துறையை சேர்ந்தவர்கள் முன்னிலையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடம் மக்கள் அதிகம் நடமாடும் இடமாக இருந்தாலும் எதிரியை அடையாளப்படுத்த தனிநபர் சாட்சியம் முன்னிருத்தாமலும், சம்பவயிடம் குறித்து பார்வை மகசரோ, மாதிரி வரைபடமோ இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை என்பதும், அரசுத்தரப்பு சம்பவ இடம் குறித்து தெளிவான விவரங்களை நீதிமன்றத்திற்கு தர எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாட்டில்களில்

இருந்து மாதிரி கைப்பற்றப்பட்டு அதனை பகுப்பாய்வுக்கு அனுப்பி வைப்பதற்கு அரசுத்தரப்பில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அரசுத்தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

மேலும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32-ஐ பின்பற்றி புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட காரணங்களால் அரசுத்தரப்பு வழக்கானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act ன்படியான வகையங்களை பூர்த்தி செய்வதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இவ்வழக்கில் ஏற்படும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16) முடிவாக எதிரி, பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து பிரிவு 271(1)BNSS-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

17) இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019

| Description of the accused | | | | | | | Date of | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
| 1. | Kottur 219/2025 | Sakayaraj | Rayappan | Coolie | Main Road, Kottur Thottam | 68/25 | 26.10.2025 | 26.10.2025 | Station Bail | Not Applicable | 13.03.2026 | 13.03.2026 | Accquitted | 08.04.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ஆம் நாள் என்னால் இந்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

**1. அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. கார்த்திகேயன், | கைப்பற்றுதல் மற்றும் அழிப்பு மகசர் சாட்சி |

| | | |
|---|---|---|
| | முதல் நிலைக் காவலர் | |
| அ.சா.2 | திரு. செல்வநாயகம்<br>காவல் உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரிக்காக<br>ஆவணங்களின் அடிப்படையில கூடுதல்<br>சாட்சி |

**2. அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 27.12.2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.2 | 27.12.2025 | அழித்தல் மகசர் |
| அ.த.சா.ஆ.3 | 27.12.2025 | முதல் தகவல் அறிக்கை |

3. அரசுத் தரப்பில் சான்று பொருட்கள்- இல்லை

4. எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் - இல்லை.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

**குறிப்பு -**

1. இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கு விசாரணையின்போது சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.
4. கு.வி.மு.ச 363 (5) ஆவது பிரிவின்படி மன்னார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.-

**நகல் :-**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.